**செய்தி வெளியீடு எண் : 1197** **நாள் : 16.07.2022**

**செய்தி வெளியீடு**

<u>தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்</u>

மாமல்லபுரத்தில் 44- வது செஸ் ஒலிம்பியாட் பணிகள் 80 சதவீதம் முடிவடைந்துள்ளது என மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன் , விளையாட்டு மேம்பாட்டு த்துறை அமைச்சர் திரு. சிவ. வீ. மெய்யநாதன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டு த்துறை அமைச்சர் திரு. சிவ. வீ. மெய்யநாதன் அவர்கள் இன்று (16.07.2022) 44-வது செஸ் ஒலிம்பியாட் நடைபெறவுள்ள மாமல்லபுரத்தில் நடைபெற்று வரும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 44- வது செஸ் ஒலிம்பியாட் போட்டி தமிழ்நாட்டில் சிறப்பாக நடத்திட அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளார்.

போட்டி நடைபெறவுள்ள பூஞ்சேரிக்கு கடந்த 12-. ந்தேதி நேரடியாக வருகைதந்து ஆய்வு மேற்கொண்டு போட்டி சிறப்பாக நடைபெற அனைத்து ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்கள்.

இன்று (16.07.2022) போட்டி நடைபெறவுள்ள இடத்தில் உயர் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டுள்ளோம். செஸ் போட்டி நடைபெறவுள்ள இடத்தில் 22 ஆயிரம் சதுர அடியில் உள்ள அரங்கம் 1-ல் 196 செஸ் டேபிள் , போர்டுகளும், உலகத்தரம் வாய்ந்த வகையில் 52-ஆயிரம் சதுர அடியில் அமைக்கப்பட்டு வருகின்ற பிரமாண்ட அரங்கம் 2- ல் 512 செஸ் டேபிள் , போர்டுகளும் அமைக்கப்பட்டு வருகிறது.

அரங்கம் 1- ல் 49 அணிகளும், அரங்கம் 2- ல் 128- அணிகளும் விளையாடுகின்றன. ஏறத்தாழ ஒரு நாளைக்கு 177 அணிகள் விளையாடுகின்ற இப்போட்டியில் 187 நாடுகளை சார்ந்த வீரர் - வீராங்கனைகள் விளையாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விளையாட்டு அரங்கத்தில் தரைதளம், மின்விளக்குகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. தற்போது 80 சதவீத பணிகள் முடிவுற்றுள்ளன. போட்டியில் பங்கேற்க வருகை தரவுள்ள வீரர்கள் , நடுவர்கள் , விருந்தினர்கள் அனைவரையும் தமிழர் பண்பாடு, கலாச்சாரம், விருந்தோம்பல் படி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் வருக, வருக என வரவேற்க காத்திருக்கிறோம் .

நேற்று (15.07.2022) செஸ் போட்டிக்கான டீசர் மரியாதைக்குரிய நடிகர் ரஜினிகாந்த் அவர்கள் வெளியிட்டார் . நம் முதல்வர் பங்கேற்றுள்ள இந்த டீசர் உலக அளவில் மிகப்பெரிய வரவேற்பை பெற்றுள்ளது.- எனக்கூறினார்.

இந்த ஆய்வின்போது கதர் கிராம தொழில் முனைவோர் வாரிய தலைமை நிர்வாக அலுவலர் முனைவர் பொ. சங்கர் , இ.ஆ.ப அவர்கள் , தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய தலைமை செயல் அலுவலர்/ உறுப்பினர் செயலர் மருத்துவர் காப. கார்த்திகேயன் , இ.ஆ.ப. அவர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in